सत्यमेव जयते

## வெளிவிவகார அமைச்சு

## இந்திய அரசு

## <u>இலங்கையின் வடமாகாண சபைத்தேர்தல்</u>

21 செப்டெம்பர் 2013 அன்று வடமாகாணம் அடங்கலாக மூன்று மாகாணங்களிலும் வெற்றிகரமாக நடாத்தி முடிக்கப்பட்ட தேர்தல்களை இந்திய அரசு வரவேற்கின்றது. அதிகளவான வாக்காளர் பங்கெடுப்பும் பல்வேறு அரசியற்கட்சிகளின் உற்சாகமான பங்கேற்பும் ஜனநாயக விழுமியங்கள் மற்றும் மாகாணசபை உள்ளிட்ட பல்வேறு மட்டங்களிலுள்ள பிரதிநிதித்துவ சபைகளுக்கான இலங்கை மக்களின் அர்ப்பணிப்பை வெளிக்காட்டுகின்றது. தென்னாசிய தேர்தல் முகாமைத்துவ அமைப்பு மற்றும் பொதுநலவாய தேர்தல் கண்காணிப்பு அமைப்பு என்பவற்றின் தேர்தல் அவதானிப்புகளை நாம் கருத்தில் கொண்டுள்ளோம். ஒட்டுமொத்தமாக பார்க்கும்போது மக்களின் விருப்பம் இத்தேர்தலில் வெளிக்காட்டப்பட்டுள்ளமையை நாம் ஏற்றுக்கொண்டுள்ளோம்.

வடமாகாணசபைக்குத் தேர்தல் நடாத்தப்படுமென சர்வதேச சமூகத்திற்கு இலங்கை அரசு கொடுத்த அர்ப்பணிப்பு வாக்குறுதியை பெருமைப்படுத்தி நிறைவேற்றியுள்ளது. சர்வதேச சமூகத்திற்கு இலங்கை அரசு வழங்கிய அரசியலமைப்பு திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தல் மற்றும் அதைத்தாண்டி செல்லுதல் உள்ளிட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றும் என எதிர்பார்கின்றோம்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் இலங்கை அரசும் விடுத்துள்ள சாதகமான செய்திகளை நாம் கவனத்திற் கொண்டுள்ளோம். இருசாராரும் வடமாகாண மக்களின் முன்னேற்றத்திற்காக சேர்ந்து வேலைசெய்ய ஆயத்தமாக உள்ளதாக கூறியமை உண்மையில் திருப்தி தரும் ஒரு விடயமாகும். வடமாகாணமானது 30 வருடங்களாக நீண்ட ஆயுதப்போரின் வடுக்களில் இருந்து மீண்டுள்ளது. இத்தகைய நிலையிலுள்ள மக்களின் உடனடித்தேவைகளை பூர்த்தி செய்யவென அவசரகதியில் மக்களின் தேவை நோக்கிய கரிசனையுடன் இருபகுதியும் பங்காளித்துவ மனப்பாண்மையுடனும் பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளும் தன்மையுடனும் ஆக்கபூர்வமாக செயற்படுமாறு வேண்டுகின்றோம். இத்தகைய கூட்டிசைவான ஒரு அணுகுமுறையே இரண்டு சமூகங்களினதும் உண்மையான நல்லிணக்கத்திற்கு வழிவகுக்கும்.

இந்தச் செயன்முறையை மேலும் முன்னெடுத்துச்செல்ல இருதரப்புடனும் சேர்ந்து செயற்பட இந்திய அரசு அர்ப்பணிப்புடன் செயற்படும். இதனால் இலங்கையிலுள்ள சிறுபான்மையினம் உள்ளிட்ட சமூகங்கள்அனைத்தும் ஒன்றுபட்ட இலங்கையின் சமபங்காளிகளாக தம்மை உணர்வதோடு சமத்துவம், நீதி, சுயகௌரவம் மிக்க ஒரு எதிர்காலத்தை எதிர்பார்க்கமுடியும்.

புதுடெல்லி

24 செப்டெம்பர் 2013